भारतीय गैर न्यायिक

एक सौ रुपये Rs. 100

₹ 100 ONE HUNDRED RUPEES

सत्यमेव जयते

भारत INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU — ரூ.100/- AB 13201[illegible]

தமிழ்நாடு
வ.எண்: 13313 தேதி 25/11/2011
P. RAJU
STAMP VENDOR
L.No: 7 / TRP / 2008
SULUR. TAMILNADU

பொங்கியம்மாள் பழனிச்சாமி கல்வி அறக்கட்டளை

2

பொங்கியம்மாள் பழனிச்சாமி கல்வி அறக்கட்டளை

இந்த அறக்கட்டளை அமைப்பு 2011ம் வருஷம் நவம்பர் மாதம் 25ந் தேதி கோயமுத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், கஸ்பா, காடாம்பாடி, பாரதி நகர், White House, 7L/141 என்ற விலாசத்தில் வசிக்கும் பழனிச்சாமிக்கவுண்டர் அவர்கள் குமாரர் பாலதண்டபாணி (ஓட்டுநர் உரிமம் எண் :- TN37 19970003412) என்பரால் உருவாக்கப்படுகிறது. இவரே இந்த அறக்கட்டளை அமைப்பு ஆக்கியோன் (Authors of the Trust) என அழைக்கப்படுவர்.

NOTARY
N. PARAMESWARI
B.Com., B.L.,
COIMBATORE DIST.
Regd. No: 9375/2011
GOVT. OF INDIA

DOCUMENT
No/Year 4621/2011
Page No. 1 / Total Pages 12
Sub Registrar
Sulur

भारतीय गैर न्यायिक

एक सौ रुपये Rs. 100

रु. 100 ONE HUNDRED RUPEES

सत्यमेव जयते

भारत INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU ரூ.100/- AB 132093

தமிழ்நாடு
வ.எண்: 13314 தேதி 25/11/2011
P. RAJU
STAMP VENDOR
L.No: 7 / TRP / 2008
SULUR, TAMILNADU

பொங்கியம்மாள் பழனிசாமி கல்வி அறக்கட்டளை

2

மேலே குறிப்பிடப்பட்ட ஆக்கியோர் (Authors of the Trust) எளியோர் கல்வி மேம்பாட்டிற்காக, ஆதரவற்றோர் மருத்துவ உதவிக்காக மற்றும் பொது நலனுக்காக வசதியும், வாய்ப்பும் ஏற்படுத்தவேண்டும் என்ற அறச்சிந்தனையினால் உருவானதுதான் "பொங்கியம்மாள்பழனிச்சாமி கல்வி' அறக்கட்டளை" என்ற இந்த அறக்கட்டளை அமைப்பு மேற்காணும் அறக்கட்டளை அமைப்புக்கு ஆதார நிதியாக ரூபாய் 10,001.00 (ரூபாய் பத்தாயிரத்தி ஒன்று) ஆக்கியோரால் (Author of the Trust) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அறக்கட்டளை நிர்வாகம் (Management of Trust) அமைப்பு முறையாக செயல்படி விதிகள் தேவைப்படும் என்பதால், இந்த அறக்கட்டளை ஆவணம் பின்வரும் குறிக்கோள்களையும் விளக்கங்களையும் உள்ளடக்கியுள்ளது.

DOCUMENT
No/Year 1462/2013/BK4
Page No. 2 / Total Pages 12
Sub-Register Sulur

NOTARY
R. PARAMESWARI B.Com., BL
COIMBATORE DIST
Regd. No. 9375/2011
GOVT. OF INDIA

COUNTERSIGNED

Chief Educational Officer.
Coimbatore-1.
24/6/13

भारतीय गैर न्यायिक

एक सौ रुपये Rs. 100

रु. 100 ONE HUNDRED RUPEES

सत्यमेव जयते

भारत INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU ரூ.100/- AB 132094

தமிழ்நாடு

வ.எண்: 13315 தேதி 25/11/2011

பொங்கியம்மாள் பழனிசாமி கல்வி அறக்கட்டளை

P. RAJU
STAMP VENDOR
L.No: 7 / TRP / 2008
SULUR, TAMILNADU



1. அறக்கட்டளையின் பெயர் "பொங்கியம்மாள்பழனிச்சாமி கல்வி அறக்கட்டளை" என அழைக்கப்படும்.

2. அறக்கட்டளை அலுவலகம் இயங்கும் இடம் மற்றும் பதிவு அலுவலகம் கதவு எண் 7L/141, White House, பாரதி நகர், காடாம்பாடி கிராமம், சூலூர் வட்டம், கோயமுத்தூர் மாவட்டம் என்ற முகவரியில் செயல்படும். அறக்கட்டளை உறுப்பினர்களின் ஒருமித்த கருத்தின்படி நிர்வாக நன்மைக்காக நிர்வாக அலுவலகம் வேறு பிற இடங்களுக்கு மாற்றிக்கொள்ளவோ அல்லது கிளை நிறுவனம் நிறுவிக்கொள்ளவோ அறக்கட்டளை உறுப்பினர்களுக்கு பூரண உரிமையுண்டு.

DOCUMENT
No/Year 1462/11/BK4
Page No. 3 / Total Pages 12
Sub-Registrar
Sulur

NOTARY
N. PARAMESWARI
B.Com, B.L.
COIMBATORE DIST
Regn. No. 3375/01
GOVT. OF INDIA

COUNTERSIGNED

Chief Educational Officer.
Coimbatore - 1.

भारतीय गैर न्यायिक

एक सौ रुपये Rs. 100

रु. 100 ONE HUNDRED RUPEES

सत्यमेव जयते

भारत INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU

ரூ100/- AB 132095

தமிழ்நாடு
வ.எண்: 13316 தேதி 25/11/2011
ஏ.லைசா. பொங்கியம்மாள் பழனிசாமி கல்வி அறக்கட்டளை
P. RAJU
STAMP VENDOR
L.No: 7 / TRP / 2008
SULUR, TAMILNADU



3. அறக்கட்டளையின் நோக்கங்கள்:-

அ. சாதி சமய வேறுபாடின்றி எளியோர் அனைவருக்கும் கல்வி கற்கும் வாய்ப்பினை ஏற்படுத்த கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தி நடத்துதல்.

ஆ. சாதி சமய வேறுபாடின்றி நோய்வாய்ப்பட்ட அனைவருக்கும் மருத்துவ வசதி அளிக்க மருத்துவ மனைகள், மகப்பேறு மனைகள், குழந்தைகள் காப்பகம் மற்றும் முதியோர் காப்பகம் அமைத்தல்.

இ. பொது நலனுக்காக நூலகங்கள், சத்திரங்கள், திருமண மண்டபங்கள், பொது மண்டபங்கள் ஏற்படுத்துதல்..

ஈ. பொது அற நிறுவனங்களான கல்விக்கூடம், மருத்துவ நிறுவனம் ஆகியவைகட்கு சாதி சமய வேறுபாடின்றி உதவி அளித்தல்.

உ. இலாபம் நோக்கம் இல்லாத எல்லாப் பொது நலப்பணிகள் மற்றும் செயல்பாடுகள் செய்தல்.

1462/11/BK4
Page No. / Total Pages
4 / 12
Sub-Registrar
Sulur

NOTARY
R. PARAMESWARI
COIMBATORE DIST
GOVT. OF INDIA

COUNTERSIGNED

Chief Educational Officer.
Coimbatore - 1.

भारतीय गैर न्यायिक
एक सौ रुपये Rs. 100
रु. 100 ONE HUNDRED RUPEES
सत्यमेव जयते
भारत INDIA
INDIA NON JUDICIAL

தமிழ் நாடு तमिलनाडु TAMILNADU ரூ.100/- AB 132096
தமிழ்நாடு
வ.எண்: 13317 தேதி 25/11/2011
P. RAJU
STAMP VENDOR
L.No: 7 / TRP / 2008
SULUR, TAMILNADU



ஊ. அறக்கட்டளையின் வருமானத்தை பொது நோக்கங்களுக்காக இந்தியாவில் செயல்படுத்துதல். அறக்கட்டளையின் செயல்பாடுகள் இந்தியாவிற்கு வெளியே மேற்கொள்ளக்கூடாது.

எ. அறக்கட்டளையிலுள்ள அசையும் அசையா சொத்துக்களிடமிருந்து பெறப்படும் வருமானம் மேலே குறிப்பிடப்பட்ட நோக்கங்களில் ஏதேனும் அறக்கட்டளை உறுப்பினர்களின் சம்மதத்தின்படி நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

4. ஆக்கியோரால் அளிக்கப்பட்டுள்ள ஆதார நிதி ரூபாய் 10,001.00 (ரூபாய் பத்தாயிரத்தி ஒன்று மட்டும்) அறக்கட்டளை மற்றும் அறக்கட்டளை உறுப்பினர்களுக்குச் சொந்தமானது. அறக்கட்டளையினால் பெறப்படும் நன்கொடைகள், அன்பளிப்புகள், தானங்கள் மற்றும் சன்மானங்கள் எந்த நோக்கத்திற்காக நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்படுகிறதோ அந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படவேண்டும்.

DOCUMENT
No/Year 14-62/11/13
Page No. 5 Total Pages 12
Sub Registrar

NOTARY
K. PARAMESWARI
B.Com. B.L.
COIMBATORE DIST
Regd. No: 93/2011
GOVT. OF INDIA

COUNTERSIGNED
Chief Educational Officer,
Coimbatore - 1.

5. இந்த அறக்கட்டளையின் அடிப்படை உறுப்பினர்களின் எண்ணிக்கை 4க்கு மேற்படாமல் இருக்கவேண்டும். தற்போதைய எண்ணிக்கை 1 ஆகும். அவர்களின் பெயர்கள் பின்வருமாறு

1.திருமதி.பரிமளம், க/பெ.பாலதண்டபாணி, 12/1, கோபால் நகர், பீளமேடு, கோவை 4.

மேலே குறிப்பிடப்பட ஆக்கியோன் (Auther of the Trust) அவர் ஆயுட்காலம் வரை உறுப்பினர்களின் நிர்வாகக் கூட்டத்திற்கு தலைவர் (Chairman) ஆக இருப்பார்.

6.மேலே குறிப்பிடப்பட்ட உறுப்பினர்கள் அவர்கள் ஆயுட்காலம் வரை அறக்கட்டளையில் பதவி வகிப்பர். மேலே குறிப்பிட்ட ஏதாவது உறுப்பினர்கள் இறக்க நேரிடின், அவரின் சட்ட வாரிசு உடனடியாக உறுப்பினர் பதவி வகிக்க உரியவர் ஆவார். மேலே குறிப்பிடப்பட்ட உறுப்பினர்கள் யாரேனும் பதவி வகிக்க விரும்பாவிட்டாலோ, அல்லது இறந்துவிட்டாலோ, அல்லது பதவி நீக்கம் செய்யப்பட்டாலோ அந்த பதவிக்கு மீதமுள்ள உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள். உறுப்பினர்களின் தலைவராக இருப்பவர் இறந்துவிட்டாலோ விலகிவிட்டலோ அல்லது வேறு காரணங்களினால் பதவி விலகிவிட்டாலோ, மீதமுள்ள உறுப்பினர்களில் ஒருவர் தலைவராக உறுப்பினர் கூட்டத்தில் தேர்ந்தெருக்கும்வரை தலைவராக செயல்படுவார்.

7.அறக்கட்டளையின் தின செயல்பாடுகளை தலைவர் தன்னிச்சையாகவோ அல்லது அதிகாரம் வழங்கப்பட உறுப்பினர்கள் மூலமாக கூட்டாக பத்தி 8,9ல் கூறிய அதிகாரத்தின்படி செயல்படுவர்.

8. அ. அறக்கட்டளையின் வருமானம், அன்பளிப்பு, நன்கொடை தானங்கள், வெகுமதிகள் மற்றும் அறக்கட்டளையின் சொத்துக்கள் மூலமாகப்பெறப்படும்.

ஆ. அறக்கட்டளையின் நோக்கங்களுக்காக கொள்முதல் செய்வதற்கும், குத்தகை எடுப்பதற்கும், கட்டிடம் மற்றும் இயந்திரங்கள் அமைப்பதற்கும் அதை விடுதற்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

இ. அறக்கட்டளை செயல்படுத்துவதற்கு ஏதவாக கடன்கள் பெறுதல்.

DOCUMENT No/Year 1462/11/BK4 Page No. Total Pages

COUNTERSIGNED

Chief Educational Officer.
Coimbatore - 1.

ஈ. அறக்கட்டளையின் நடவடிக்கைகள் நிறைவேற்றுவதற்கும், அறக்கட்டளை உறுப்பினர்களில் ஒருவரையோ அல்லது அதற்கு மேற்பட்டோரையோ நியமித்தல்.

9. அறக்கட்டளைத் தலைவருக்கு உள்ள அதிகாரங்கள்:

அ. அறக்கட்டளையின் உடமைகளின் மீது கட்டுப்பாடு அறக்கட்டளையின் சார்பாக ஒப்பந்த ஆவணங்களில் ஒப்பமிட்டு பதிவு செய்தல், ஒப்புதல் அளித்தல், முடிவாக தீர்த்து வைத்தல் மற்றும் நிறைவேற்றுதல்.

ஆ. வழக்குத்தொடுத்தல், எதிர் வழக்காடுதல், வழக்கைத்திரும்பப் பெறுதல், நடுவர் தீர்ப்புக்கு விடல், சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், கைவிடுதல், அறக்கட்டளை உறுப்பினார்களால் தொடுக்கப்படும் வழக்குகள், அறக்கட்டளை உறுப்பினர்களுக்கு, எதிரான தொடுக்கப்படும் வழக்குகள், அறக்கட்டளையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு எதிரான வழக்குகள் :

இ. இவற்றின் முறையீடுகள் (Plaints), அறிக்கைகள் (Statements), ஆணை உறுதி ஆவணங்கள் (Affidavits) மற்றும் பிற செயல் முறைகளில் சரிபார்த்து ஒப்பமிடுதல்.

ஈ. அறக்கட்டளையின் விதிகட்குட்பட்டு, பணியாளர்களை நியமித்தல், தற்காலிமாக நீக்குதல், நிரந்தரமாக நீக்குதல், விடுவித்தல், ஊதிய நிர்ணயம் செய்தல்.

உ. வங்கிகளில் கணக்குத்துவக்குதல், முடித்துவைத்தல், வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

ஊ. அறக்கட்டளையின் தீர்மானத்திற்கு ஒப்ப அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

எ. இலாப நோக்கு இல்லாமல் அறக்கட்டளையின் நிதியினை முதலீடு செய்தல்.:

NOTARY
PARAMESWARI
B.Com.,B.L.
COIMBATORE DIST.
OF INDIA

DOCUMENT
No/Year 4-62/11/BK4
Page No. 7 / Total Pages 12
Sub Registrar
Sulur

COUNTERSIGNED
Chief Educational Officer.
Coimbatore - 1.

ஏ. வருமான வரிச்சட்டம் 1961, அதன் மேல் அவ்வபோது செய்யப்பட்ட திருத்தம் மற்றும் காப்புரைகட்டு ஒப்ப, அறக்கட்டளைக்குச் சொந்தமான அசையும், அசையா சொத்துக்களிலிருந்து பெறும் வருமானத்தை, விதிகட்டுட்பட்டு செலவானது போக எஞ்சியதை அறக்கட்டளையின் குறிக்கோளை நிறைவேற்றும்படி பயன்படுத்தப்படவேண்டும். வருமான வரிச்சட்டம் 1961 மற்றும் பிரிவுகள் 2(15), 11, 12, 12எ, 13 மற்றும் 80ஜி அவற்றின் காப்புரைகள் (Provision) ஆகியவைகட்கு எதிராக செயல்பட இந்த அறக்கட்டளை ஆவணத்தில் ஏற்பாடு இருப்பின் அவை செல்லத்தகாதவை ஆகும். வருமான வரிச்சட்டம் 1961 மற்றும் திருத்தங்கட்குட்பட்டு, பொது நலனுக்காக அறக்கட்டளையின் அனைத்து நடவடிக்கைகளும் அமையவேண்டும்.

ஐ. தலைவர் நிகழ்ச்சிக்குறிப்பேட்டினைப் பேணவேண்டும். நிதி, பணம் சொத்து ஆகியவைகட்டு சரியான கணக்கு வைத்திருக்கவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் முடிக்கப்படவேண்டும்.

வருமானவரிச் சட்டங்கட்குட்பட்டு அறக்கட்டளையின் நிதியினை அசையா சொத்துக்களிலோ, தீர்வை விலக்கப்பட்ட சொத்துக்களிலோ (Free hold), விலக்கப்படாத சொத்துக்களிலோ (Lease hold) முதலீடு செய்யலாம் அல்லதுஅரசுவங்கிகளிலோ,அரசு அனுமதிக்கப்பட்ட வங்கிகளிலோ (Scheduled banks) வருமான வரிச்சட்டம் குறிக்கப்பட்டுள்ள நிதி நிறுவனங்களிலோ முதலீடு செய்ய அறக்கட்டளைத் தலைவருக்கு உரிமை உள்ளது.

அறக்கட்டளை உறுப்பினர்கள் வருமான சரிச்சட்டங்கட்குட்பட்டு முதலீட்டின் வகையினை மாற்றிட உரிமையுண்டு.

10. அறக்கட்டளையின் செயல் முறைகள்:

அ. அறக்கட்டளை நிர்வாகம் மூன்று மாதத்திற்கொருமுறையாவது கூட்டவேண்டும், தேவைப்பட்டால், அறக்கட்டளை உறுப்பினர்களின் வேண்டுகோளின்படி தேவையான சமயம் கூட்டப்படலாம். கூட்டத்திற்கு குறைவான வரம்பு (quorum) இரண்டு வாக்கெடுப்பில்.

NOTARY
N. PARAMESWARI B.Com.,B.L.
COIMBATORE DIST.
Regd. No. 3375/2011
INDIA

1462/11/Bk4
Page No. 8 Total Pages 11
Sub-Registrar Sulur

COUNTERSIGNED
Chief Educational Officer.
Coimbatore - 1.

ஆ. கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் பெரும்பான்மை வாக்கு வெற்றிபெறும் வாக்கெடுப்பில் ஒத்த நிலை இருப்பின் (Equal division)தலைவர், அவரின் அறுதி வாக்கினை (casting vote) பயன்படுத்தலாம்.

இ. நிர்வாகத்தின் எந்த ஒரு தீர்மானமும், நிர்வாகத்தில் ஏற்படும் அறக்கட்டளை உறுப்பினர்களின் காலியிடத்தினால் செல்லத்தகாதவை ஆகாது.

ஈ. அறக்கட்டளை நிர்வாகம் எந்த ஒரு வித தீர்மானத்தையும் சுற்றுக்குவிட்டு (Circulation) தீர்மானிக்கலாம்.

11. அறக்கட்டளையின் கட்டமைப்புக்குள், நிர்வாகம் குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டு, விதி முறைகளை, துணை விதிகளை அறுதியிடவும், அவற்றை திருத்தவும் உரிமையுண்டு.

12. அறக்கட்டளையின் வரவு செலவு கணக்குள் வருடா வருடம் பிரதி மாதம் ஏப்ரல் 1ம் தேதி ஆரம்பித்து அடுத்த வருடம் மார்ச் 31ம் தேதி வரை எழுதி முடிக்கப்பட்டு தகுதி வாய்ந்த தணிக்கையாளரால் தணிக்கை செய்யப்படவேண்டும். தணிக்கையாளர் அறக்கட்டளை உறுப்பினர்களால் நியமிக்கப்படவேண்டும். அவரது ஊதியம் அறக்கட்டளை நிர்வாகக்கூட்டத்தினால் தீர்மானிக்கப்படவேண்டும்.

13. அறக்கட்டளையின் செயல்பாடுகள் இந்தியாவிற்கு வெளியே மேற்கொள்ளப்படாது.

14. ஆதாய நோக்குடன் எந்த் நடவடிக்கைகளையும் அறக்கட்டளை நிர்வாகம் மேற்கொள்ளாது.

15. ஏதாவது ஒரு கால கட்டத்தில் அறக்கட்டளையின் குறிக்கோள்கள் நிறைவேற்ற இயலாத நிலை ஏற்படின், இந்த அறக்கட்டளையின் சொத்துக்களும், பணமும் நிர்வாகக்கூட்டம் தீர்மானித்தபடி, அக்குறிக்கோள்களுக்கு தொடர்புடைய காரியங்கட்கு சிப்ரஸ் (Cypres) என்ற தத்துவத்தின் அடிப்படையில் பயன்படுத்தப்படவேண்டும்.

16. இந்த அறக்கட்டளை ஒரு பொது அற நிறுவனம், இது மாற்ற முடியாத ஒன்று. இதன் கீழ் சாதி சமய வேறுபாடின்றி அனைவரும் பயன் பெறத்தக்கவர்.

NOTARY
K. PARAMESWARI
B.Com., B.L.,
COIMBATORE DIST.
Regd. No: 9370/2011
GOVT. OF INDIA

DOCUMENT
No/Year 1462/11/BK4
Page No. 9 / Total Pages 12
Sub Registrar

COUNTERSIGNED
Chief Educational Officer.
Coimbatore - 1.

17. இந்த அறக்கட்டளையின் ஆதார நிதியாக ரூபாய் 10,001.00 (ரூபாய் பத்தாயிரத்தி ஒன்று மட்டும்) இன்றைய தேதியில் அறக்கட்டளையின் நிறுவனத்தின் சொத்தாகும்.

கீழ்காணும் சாட்சிகள் முன்னிலையில், மேற்காணும் அறக்கட்டளை நிறுவனம் மேற்குறிப்பிட்ட ஆண்டின் தேதியில் கையொப்பமிட்டுள்ளனர்.

சாட்சிகள்:-

1.

2.

பத்திரம் தயாரித்தவர்:-

M.சிவசிதம்பரம்
S/O.(Late) S.முத்துவெங்கடாசல முதலியார்,
3 சுப்பண பிள்ளை வீதி, சூலூர்.
உரிமம் எண் A 813 / T.R.P/ 1984.

COUNTERSIGNED

Chief Educational Officer.
Coimbatore - 1.

NOTARY
N. PARAMESWARI
B.Com B.L.
COIMBATORE DIST
Regd. No: 9375/2011
GOVT. OF INDIA

DOCUMENT
No/Year 1462/II/BK4
Page No 10 / Total Pages 12
Sub Registrar

N. PARAMESWARI, B.Com.,B.L.,
Enrolment No. MS 17 / 98
Advocate & Notary Public
(Govt. of India)
No. 702, Raja Street,
Coimbatore - 641 001
Cell : 99444 76854

1462/BK4/2011

DOCUMENT
No/Year 1462/11/BK4
Page No 12 / Total Pages 12
Sub Registrar Sulur

20 ...11........ம் ஆண்டு நவம்பர் திங்கள்
..28....ம் நாள் பகல் ........10-11.........
மணிகளுக்கிடையில் சூலூர் சார்பதிவாளர்
அலுவலகத்தில் தாக்கல் செய்து ..................
கட்டணம் ரூ ....205/....00 செலுத்தியவர்

இடது பெருவிரல்





"கூடுதல் விவரங்கள் ஆவண வரைபடத்தில் உள்ளபடி"

சார்பதிவாளர் சூலூர்

எழுதிக்கொடுத்ததாக ஒப்புக்கொண்டவர் இடது பெருவிரல்





"கூடுதல் விவரங்கள் ஆவண வரைபடத்தில் உள்ளபடி"

சார்பதிவாளர் சூலூர்

இன்னாரென்று ருபித்தவர்

[illegible] s/o [illegible]

[illegible]

20..11.......ம் ஆண்டு நவம்பர் திங்கள்...28....ம் நாள்

ஆவண எண் 1462/2011 IV புத்தகம் ஆக
பதிவு செய்யப்பட்டது
நாள் : 28-11-2011 பதிவாளர் கையொப்பம்

ச. [illegible]
சார்பதிவாளர்
சூலூர்

NOTARY
R. PARAMESWARI
B.Com., B.L.
COIMBATORE DIST
Regd. No. [illegible]/2011
GOVT OF INDIA

MDN FUTURE SCHOOL
7/141, KADAMBADI,
SULUR AERO, COIMBATORE-641 401.
Cell : 87543 58343, 88700 08343

COUNTERSIGNED

Chief Educational Officer.
Coimbatore-1.